*செய்தி வெளியீடு எண் :18* *நாள் :22.01.2019*

**தேனி மாவட்டம்**
**மாற்றுத்திறனாளிகளுக்கு மத்திய அரசின் தனித்துவமான அடையாள அட்டை (ஸ்மார்ட் கார்டு) வழங்குதல் (Unique disability ID - UDID)**
**இரண்டாம் கட்ட சிறப்பு முகாம்கள் நடைபெறவுள்ளது**
**மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.ம.பல்லவி பல்தேவ்.,இ.ஆ.ப., அவர்கள் தகவல்:-**

*****

*தேனி மாவட்டத்தில், மாற்றுத்திறனாளிகளுக்கான தேசிய அடையாள அட்டை பெற்றுள்ள அனைத்து மாற்றுத்திறனாளிகளும் (Unique disability ID – UDID) (ஸ்மார்ட் கார்டு) வழங்கப்படவுள்ளது. எனவே, UDID அட்டை பெறுவதற்கு ஏதுவாக ஊராட்சிகள் மன்ற அலுவலகங்களில் நடைபெறவுள்ளது என மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி ம.பல்லவி பல்தேவ், இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.*

*மேலும், இதுகுறித்து மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தெரிவித்துள்ளதாவது,*

*ஆண்டிபட்டி ஊராட்சி ஒன்றியத்தை சேர்ந்தவர்கள் 28.01.2020 முதல் 30.01.2020 வரை, கடமலை மயிலை ஊராட்சி ஒன்றியத்ததை சேர்ந்தவர்கள் 30.01.2020 மற்றும் 31.01.2020, கம்பம் ஊராட்சி ஒன்றியத்தை சேர்ந்தவர்கள் 01.02.2020 அன்றும், உத்தமபாளையம் ஊராட்சி ஒன்றியத்தை சேர்ந்தவர்கள் 01.02.2020 முதல் 04.02.2020 வரை, சின்னமனூர் ஊராட்சி ஒன்றியத்தை சேர்ந்தவர்கள் 05.02.2020 மற்றும் 06.02.2019, போடிநாயக்கனூர் ஊராட்சி ஒன்றியத்தை சேர்ந்தவர்கள் 06.02.2020 மற்றும் 07.02.2020, பெரியகுளம் ஊராட்சி ஒன்றியத்தை சேர்ந்தவர்கள் 11.02.2020 மற்றும் 12.02.2020, தேனி ஊராட்சி ஒன்றியத்தை சேர்ந்தவர்கள் 13.02.2020 மற்றும் 14.02.2020 சம்பந்தப்பட்ட கிராம ஊராட்சி அலுவலகங்களிலும், முகாம்கள் நடைபெறவுள்ளது. எனவே, நகராட்சி, பேரூராட்சி மற்றும் ஊராட்சிப் பகுதிகளில் வசிக்கும் மாற்றுத்திறனாளிகள் தங்களுக்கு அருகில் உள்ள ஊராட்சி மன்ற தலைவர் / செயலாளரை தொடர்பு கொண்டு முகாம் விபரத்தினை தெரிந்துகொள்ளலாம்.*

*மேலும், இம்முகாமிற்கு மாற்றுத்திறனாளிகள் வர தேவையில்லை பெற்றோர் / பாதுகாவலர் மட்டும் மாற்றுத்திறனாளிக்கான தேசிய அடையாள அட்டை அசல் மற்றும் நகல், பாஸ்போர்ட் அளவு புகைப்படம்-1, வெள்ளைத்தாளில் மாற்றுத்திறனாளியின் கையொப்பம் அல்லது இடதுகை பெருவிரல் ரேகை, ஆதார் அட்டை நகல், குடும்ப அட்டை நகல், வாக்காளர் அட்டை நகல் ஆகியவற்றுடன் மேற்காணும் தேதிகளில் தங்களுக்கு அருகில் உள்ள நடைபெறும் சிறப்புமுகாமில் ஒப்படைக்குமாறு கேட்டுக்கொள்ளபடுகிறது.*

*மேலும், முகாமில் கலந்து கொள்ள இயலாதவர்கள் மேற்காணும் சான்றுகளுடன் மாவட்ட மாற்றத்திறனாளிகள் நல அலுவலகம், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அலுவலகம் பின்புறம், மாவட்ட ஆட்சியரக வளாகம், தேனியில் ஒப்படைத்து மத்திய அரசின் UDID அட்டை பெற்றுக்கொள்ளலாம்.*

*மேற்கண்ட சிறப்பு முகாமில் கலந்து கொண்டு மத்திய அரசின் மாற்றுத்திறனாளிகளுக்கான தனித்துவமான அடையாள அட்டை (Unique disability ID - UDID) பெற்று பயனடையுமாறு மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி ம.பல்லவி பல்தேவ்., இ.ஆ.ப. அவர்கள் தெரிவித்துள்ளார்.*

***வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், தேனி.***